செய்தி வெளியீடு எண்—357 நாள்—3.7.2013

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சி காலத்தில் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன வரலாற்றிலேயே முதல் முறையாக 2 லட்சத்து 3 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்கு கட்டும் திட்டங்கள்**

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ஆர்.காமராஜ் அவர்கள்
தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தில் இன்று (3.7.2013) நிறுவனத்தின் தலைவர் திரு. ஜி.முனியசாமி அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ஆர்.காமராஜ் அவர்கள் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்கள்.

ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது “மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசின் பல்வேறு துறைகளையும் ஆய்வு செய்து அரசின் நலத் திட்டங்களை விரைந்து முடித்திட ஆணைகள் வழங்கி வருகிறார்கள். அதன்படி, மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க இன்று தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை ஆய்வு செய்திட இக்கூட்டம் நடைபெற்றது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் ‘தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்—2023’ அறிவிப்பில் வேளாண் பெருமக்களுக்கு பெரிதும் பயன் அளிக்கும் வகையில் புதிய சேமிப்பு கிடங்குகள் கட்டும் திட்டத்திற்கு அதிக முன்னுரிமை அளித்துள்ளார்கள். இந்தியாவிலேயே பொது விநியோகத்திட்டத்தில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது. இத்திட்டத்திற்கு பெரும் உறுதுணையாக உள்ளது தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் பணி இன்றியமையாதது. தமிழகத்தில் மொத்தம் 57 இடங்களில் 6 லட்சத்து 68 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்குகளை கொண்டு இந்நிறுவனம்

செயல்பட்டுவருகிறது. இந்நிறுவனம் தொடங்கப்பட்ட நாள் முதல் இன்றுவரை இலாபம் ஈட்டும் நிறுவனமாகவும் திகழ்கிறது. இருப்பினும், பொதுமக்களுக்கும், தொழில் நிறுவனங்களுக்கும், விவசாய பெருமக்களுக்கும் நேரடியாக பயனளிக்கும் இந்நிறுவனம், எவ்வித விமர்சனங்களுக்கும் இடம் தராமல், திட்டங்களில் தொய்வில்லாமல் செயல்படவேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அலுவலர்களை கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சி காலத்தில் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன வரலாற்றிலேயே முதல் முறையாக 2 லட்சத்து 3 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்கு கட்டும் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் காரைக்குடி, அருப்புக்கோட்டை, கோவில்பட்டி ஆகிய இடங்களில் மொத்தம் 25 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டு, 15.4.2013 அன்று முதல் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. மேலும், மதுராந்தகம், சின்னசேலம், ஆத்தூர், வேலூர், கிருஷ்ணகிரி மற்றும் மானாமதுரை ஆகிய இடங்களில் மொத்தம் 36 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்குகள் இவ்வாண்டு இறுதிக்குள் கட்டி முடிக்க விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், நாகப்பட்டினம், திருச்செங்கோடு, திருப்பத்தூர், வலங்கைமான், நன்னிலம் ஆகிய தேர்வு செய்யப்பட்ட இடங்களில் மொத்தம் 17 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் கட்ட ஆயத்த பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 6.5.2013 அன்று 110 விதியின் கீழ் அறிவித்த ஒரு லட்சத்து 25 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவுடைய கிடங்குகள் கட்ட சேலம், தருமபுரி, தேனி, கடலூர், திருநெல்வேலி, இராமநாதபுரம், முசிறி, இராணிபேட்டை

ஆகிய இடங்களில் தேவையான நிலங்களை கையகப்படுத்த அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களை அணுகி நிலங்களை பெற்று திட்டங்களை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இப்பணிகளை 2014 ஆம் ஆண்டிற்குள் செயல்பாட்டிற்கு கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது என மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வு கூட்டத்தில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.பி.டபிள்யூ.சி. டேவிதார், இ.ஆ.ப., அவர்கள் நிறுவனத்தின் திட்டங்களையும், செயல்பாடுகளையும் விளக்கினார்கள். கூட்டத்தில் பொது மேலாளர் திரு.நூர்முகமது, நிறுவனத்தின் உதவி பொது மேலாளர்கள், மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9